செ.வெ.எண்:275 1　　நாள்: 16.05.2011

செய்தி வெளியீடு

தமிழக முதலமைச்சராக இன்று (16.05.2011) பதவியேற்றுக் கொண்ட மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்திலுள்ள முதலமைச்சர் அறைக்கு வருகை தந்து தமது பணியைத் தொடங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமது முதற்பணியாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் முக்கியத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டதுடன், தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவும், அரசின் சிறப்புத் திட்டங்களை செம்மையோடு, விரைந்து செயல்படுத்தவும் "சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை" எனும் பெயரில் புதிய துறை ஒன்றை தொடங்கவும் உத்தரவு பிறப்பித்து கையொப்பம் இட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்து முதல் கையொப்பமிட்ட திட்டங்கள் வருமாறு:-

1. படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியாக தற்போது வழங்கப்பட்டு வரும் 25,000 ரூபாய் நிதி உதவியோடு, மணப் பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (அரை சவரன்) தங்கம் இலவசமாக வழங்கப்படும் எனும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஆணை பிறப்பித்து அதற்குரிய கோப்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமது கையொப்பத்தை இட்டார்கள்.

2. இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்குவதோடு மணப் பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் இலவசமாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அதற்கான கோப்பில் கையொப்பமிட்டார்கள்.

3. முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு மேற்காணும் ஒய்வூதிய திட்டங்களின் கீழ் பலன் பெறும் பயனாளிகளுக்கு தற்போது வழங்கப்படும் 500 ரூபாய் மாத ஒய்வூதியத்தை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு அதற்குரிய கோப்பில் கையொப்பமிட்டார்கள்.

4. பொது விநியோக திட்டத்தில் அரிசி பெறத் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கவும், அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 35 கிலோ அரிசியை இலவசமாக வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து கையொப்பம் இட்டார்கள்.

5. தமிழகத்தின் கடலோர மீன் வளத்தைப் பாதுகாக்க வேண்டி ஒவ்வோர் ஆண்டும் 45 நாட்கள் மீன் பிடிக்க தடை விதிக்கப்படும் காலகட்டத்தில் பாதிக்கப்படும் மீனவக் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படும் 1000 ரூபாய் உதவித் தொகையை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஒப்புதல் அளித்து அதற்கான கோப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையொப்பமிட்டார்கள்.

6. அரசுப் பணி புரியும் தாய்மார்கள் தங்களது பச்சிளம் குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்க மகப்பேறு கால சலுகையாக 6 மாத காலம் மகப்பேறு விடுப்பு அளிக்க ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்பில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கையொப்பமிட்டார்கள்.

7. அத்துடன் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவும், அதற்கான திட்டங்களை வகுத்து சிறப்புடன்அமல்படுத்தவும், அரசின் சிறப்புத் திட்டங்களை செம்மையோடு விரைந்து செயல்படுத்தவும் புதிய துறை ஒன்றைத் தொடங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டு அதற்குரிய கோப்பில் கையொப்பமிட்டார்கள். இத்துறை, “சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை” (Department of Special Programme Implementation) எனும் பெயரில் அழைக்கப்படும். இத்துறைக்கென தனி அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் விரைந்து செம்மையோடு நிறைவேற்ற வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உறுதிப்பாட்டை (commitment) எடுத்துக்காட்டும் வகையில், முதலமைச்சராகப் பதவியேற்றதும் முதற்பணியாக மேற்காணும் திட்டங்களை செயல்படுத்த ஆணையிட்டு அதற்குரிய கோப்புகளில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கையொப்பமிட்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், சென்னை – 9
நாள் : 16.05.2011